www.tamilarangam.net

தந்துதவியவர்: தேசம்நெற்

The Eela Bhoomi

# ஈழபூமி

The Weekly Tamil Newspaper in Europe

அன்பளிப்பு U.K. 40p  Germany: 2.00DM, France: 5FF, Swiss: 2SF, Canada: 1.25Ca$

ஆண்டு 1 வாரம் 4  09-12-91  திங்கட்கிழமை



ஓவியக் கலைஞன் கிருஷ்ணராஜா விமர்சனக் கடிதம் உள்ளே

## நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு நாம் தயார்

# மாவீரர் விழாவில் பிரபாகரன்!

கடந்த சில தினங்களாக வடக்கு பகுதிகளில் மாவீரர் தினம் பாரிய அளவில் நடந்தேறியது. அரச படைகள் தீவுப் பகுதிகளில் ஆட்கொண்டிருக்க, விமானப் படைகளின் தொடர்ச்சியான குண்டு வீச்சுக்களுக்கு மத்தியிலும் யாழ் மாவட்டத்தில் நடந்த மாவீரர்தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார் விடுதலைப்புலிகளின் தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்.

மேற்படி கூட்டத்தில் உரையாற்றிய பிரபாகரன் கூறியதாவது, நாம் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு சுமுகமான தீர்வைக் கொண்டு வரவே விரும்புகிறோம். ஸ்ரீ லங்கா ஆக்கிரமிப்புப் படைகளைக் கொண்டு எம்மை அழித்து விட்டு தான் பிரச்சனைக்கு தீர்வு காண்போம் என்று பிரேமதாசா எண்ணினால் அது அவர் போடுகின்ற தப்புக் கணக்காகும். தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வென்றெடுக்கப் போராடும் நாம் நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தைக்கு எம்

தொடர்ச்சி 7ம் பக்கம்



## மோர்ட்கேஜ் பாலா கைது!

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மோர்ட்கேஜ் பாலா என அழைக்கப்படும் திரு பாலா குணா அவர்கள் நியூ மோல்டன் பகுதி பொலீசாரினால் அவரது இல்லத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

வீடு வாங்குதல், வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல் போன்றவற்றிற்கு மோர்ட்கேஜ் வசதி செய்து கொடுக்கும் இவர் இன்றுவரை பொலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். இது பற்றி ஈழபூமி தகவல் பிரிவிற்கு கிடைத்த விபரங்கள் வருமாறு.

இவர் கூடுதலாக வீடு வாங்குபவர்களுக்கு மோர்ட்கேஜை செய்து கொடுக்கும் ஒரு பிரதிநிதியாக வேலை செய்தவர். கிறக் பேர்சனல் பைனாஸ்சியல் மனேஜ்மெண்ட் லிமிடெட் என்ற

தொடர்ச்சி 7ம் பக்கம்

## விசேட புலனாய்வுப் பிரிவு நியமிப்பு

ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் மறைந்த செயலாளர் நாயகம் பத்மநாபா உட்பட விடுதலைப் புலிகளினால் கொலை செய்யப்பட்ட பதினொரு பேர் மீதான விசாரணையை முடிவுக்கு கொண்டுவர தமிழ் நாட்டு அரசு விசேட பிரிவு ஒன்றை உருவாக்கியுள்ளது. மூன்று பேர் கொண்ட இந்த புலனாய்வுப் பிரிவு தமிழ் நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் கட்டளையை அடுத்து நிறுவப்பட்டுள்ளதா[க] செய்திகள் தெரிவிக்கின்றன. [...] மக்கள் புரட்சிகர முன்ன[ணி] அமைப்பின் விசேட கூட்[டம்] ஒன்று நடைபெற்றுக் கொண்[...]

தொடர்ச்சி 7ம் பக்[கம்]

## யாழ் நகர் மீது சிறு தாக்குதல்கள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் யாழ் மாவட்டத்தில் அரச படைகளின் அழிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

முன்னையது மாதிரி தாக்குதல்கள் உக்கிரமாக இல்லாது விட்டாலும் கூட குண்டு வீச்சுக்கள் முற்றாக நிறுத்தப்படவில்லை என்று அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## க.பொ.த பரீட்சைகள் ஆரம்பம்

நீண்ட காலமாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் நடைபெறாதிருந்த கா.பொ.தா (சாதாரணதர) பரீட்சைகள் கடந்த சில நாட்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பகுதி மாணவா[ர்]கள் தமது பாடங்களை கொழு[ு]ம்பில் எழுதலாம் என்று அரசா[ா]ங்கம் அறிவித்திருந்த போது[ம்] வடக்கு கிழக்குப் பகுதிகளி[ல்] இம்முறை எழுதுவதற்கு ஒழு[ங்]குகள் செய்யப்பட்டுள்ளதா[க] செய்திகள் தெரிவிக்கின்றன[.] பலத்த சிரமங்களின் மத்தியி[ல்] பரீட்சைக்கு தயாரான இப் பகு[தி] மாணவர்கள் நீண்ட கால இ[...] வெளிக்குப்பின்னர் சொந்த இ[ட]ங்களில் பரீட்சை எழுத அ[னு]மதியளித்த அரசு இப்பகுதிகளி[ல்] இராணுவ நடவடிக்கைகளை[ை] வெகுவாகக் குறைத்துள்ளதா[க] அங்கிருந்து கிடைக்கும் செய்[தி]கள் கூறுகின்றன.

அனைத்து செய்திகளையும் [...]

www.tamilarangam.net



# உலகச் செய்திகள்

## ஐக்கிய நாணயக்கூட்டமைப்பில் பிரித்தானியா பங்குபற்றாது

9ம் திகதி நடைபெற்ற ஐரோப்பிய சமூகத்தின் நாணயக் கூட்டமைப்பில் தாம் பங்கு பற்றப்போவதில்லை என பிரித்தானியா அறிவித்துள்ளது. இக் கூட்டமைப்பில் பங்குபற்றும் ஏனைய நாடுகள் இக்கூட்டமைப்பு 1996ம் ஆண்டு முதல் நடைமுறைக்கு கொண்டு வர இருக்கும் ஐரோப்பிய பொது நாணயத்தை தாம் தமது நாடுகளில் அமுல்படுத்த இணக்கம் தெரிவித்துள்ளனர். இந்நாணயத்தை 1996ம் ஆண்டு 7 நாடுகளும் 1998 இல் மேலும் இரு நாடுகளும் ஏற்க உள்ளது. ஆனால் காலப்போக்கில் பொருளாதார நெருக்கடியினால் பிரித்தானியாவும் இதில் பங்கு பற்றலாம் என அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## சிதறிப்போன நிலையில் சோவியத் யூனியன்

அண்மையில் ரஷ்யா, யுக்ரேன், பைலோரஷ்யா ஆகிய மூன்று குடியரசும் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து புதிதாக ஒரு பொதுநலவாய சுதந்திர அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது. இம் மூன்று குடியரசின் சனத்தொகை சோவியத் யூனியனின் சனத்தொகையில் முக்கால் பங்கையும் சோவியத்தின் அணு ஆயுதத்தில் 80 வீதத்தையும் அடக்குகிறது. இப் புதிய கூட்டினால் வலுவிழந்திருக்கும் சோவியத்தின் அதிபரை உடனடியாகப் பதவியிலிருந்து விலகுமாறு பலர் வற்புறுத்திவருவதாகவும் இவர் எக்கணத்திலும் பதவி விலகலாம்

எனவும் எதிர் பார்க்கப் படுகிறது. இக் கூட்டமைப்பின் வெளிநாட்டு அமைச்சர்கள் அண்மையில் சந்தித்து ஐரோப்பிய சமூகத்தின் பலத்தை எப்படி முறியடிக்கலாம் என ஆராய்ந்ததாக அமெரிக்கா கருத்து தெரிவித்ததுடன் அணு ஆயுதக் கட்டுப்பாடு சம்பந்தமாக கோர்பச்சோவுடன் அமெரிக்கா ஏற்படுத்திய ஒப்பந்தங்களை இது மீறக்கூடும் என அமெரிக்கா அச்சம் தெரிவித்துள்ளது. சோவியத்தில் ஏற்பட்டுள்ள இம்மாற்றங்களைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர் பிரான்ஸின் தலைவரை அவசரமாக சந்திக்க ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். இப்புதிய கூட்டினால் சோவியத்தில் சிவில் யுத்தம் ஒன்று உருவாகலாம் என பிரித்தானியப் பிரதமர் கருத்து தெரிவித்துள்ளார்.

## அதிகரித்துவரும் ஐ.ஆர்.எ. தாக்குதல்கள்

அண்மையில் மஞ்சஸ்டரிலும், பிளக்பூலிலும் I.R.A இனால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களை அடுத்து ஸ்கொட்லண்யாட் பொலீசார் லண்டன் வாசிகளுக்கு தாக்குதல்கள் மேலும் தொடரலாம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். நத்தார் கொண்டாட்டங்களில் மும்முரமாக இருக்கும் நகரமக்களுக்கு விடுத்துள்ள எச்சரிக்கையில் அண்மையில் சந்தேகத்துக்கு இடமான வகையில் பல எரி குண்டுகளை தாம் கைப்பற்றி உள்ளதாகவும் இது பற்றி மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் சந்தேகத்துக்கிடமான எந்தப் பொருட்களையும் அணுக வேண்டாம் என கேட்கப்பட்டுள்ளனர். இதுபோல் பல எரி குண்டுகளை தாம் ஏற்கனவே இலண்டன் பாதாள ரயில் நிலயங்கள் பலவற்றில் கைப்பற்றியுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளனர்.

## கரவைக் கந்தசாமி சந்தித்து பேசினார்

(வவுனியா நிருபர்)

புளட் அமைப்பின் உப தலைவர் திரு.கரவை கந்தசாமி வட பகுதி இராணுவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பான மேஜர் ஜெனரல் கொப்பேக்கடுவவை அனுராத புரத்தில் உள்ள ஒரு இராணுவ முகாமில் சந்தித்துப் பேசினார். வடக்கிலுள்ள மக்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள பெரும் கஸ்டப் படுவதாகவும் அவர்கள் இலகுவில் இப் பொருட்களை பெற்றுக்கொள்ள தகுந்த வழிவகைகளைச் செய்து தர வேண்டும் என்றும் இவர் கோரிக்கை விடுத்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## விளம்பரங்கள் கோரப்படுகின்றன

நான்காம் பக்க ஈழ பூமி விளம்பரப் பகுதியில் பிரசுரிப்பதற்கு வாசகர்களிடம் இருந்து, தேவை, விற்பனைக்கு, மணமகன் தேவை, மணமகள் தேவை போன்ற விளம்பரங்கள் கோரப்படுகின்றன.

இக்கூப்பனுடன் அனுப்பப்படும் விளம்பரங்களுக்கு விசேட கட்டணம் அறவிடப்படும்.

## யாழ்நகர் மீது குண்டு வீச்சு

(வவுனியா)

யாழ்நகரின் பல பாகங்களிலும் உள்ள புலிகளின் நிலைகள் மீது ஸ்ரீ லங்கா இராணுவம் கடந்த சில நாட்களாக பலத்த தாக்குதல்களை மேற் கொண்டு வருகிறது. வல்வெட்டித்துறை, பருத்தித்துறை உட்பட பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல்கள் புலிகளின் மாவீரர் கொண்டாட்டங்களை முறியடிக்கும் நோக்கிலேயே நடாத்தப்பட்டன என நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பிரபாகரனின் 37வதுபிறந்த தினமான 27.11.91 அன்று இத் தாக்குதல்கள் உக்கிரமாக நடாத்தப்பட்டதாக இன்னொரு செய்தி தெரிவிக்கின்றது.

## விபச்சாரத்திற்கு பாலம் அமைக்கிறார் கமீத்

(கொழும்பு மார்.4)

இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகள் அமைப்பது என்று அறிக்கைவிட்ட ஸ்ரீலங்கா நீதி, உயர்கல்வி அமைச்சர் ஏ.சி.எஸ் கமீத் விபச்சாரத்துக்கு பாலம் அமைக்கிறார் என்கிறார்கள் கொழும்பு பல்கலைக் கழக மாணவர் அவையினர். அமைச்சின் வாயிலிலும் மற்றும் பல இடங்களிலும் போராட்டத்தை நடாத்தும் இவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள். கமீத் கொண்டுவரும் இணைந்த பல்கலைக்கழக முறையில் பயிற்றப்பட இருக்கும் துறைகளில் முக்கியமானவை உடல்பிடித்தல் (மஜாஜ்) விளம்பரங்களுக்கு போஸ் கொடுத்தல் என்பவை யாகும். இவைகள் எதனைக் கருதுகின்றன? இது போன்ற துறைகள் விபச்சாரத்தை ஊக்குவித்து நாட்டின் கலாச்சாரத்தை சீரழிக்கவே உதவும். ஆகவே, இத் திட்டத்தை நாம் கடுமையாக எதிர்கின்றோம் என்கிறார்கள் இப் பல்கலைக் கழக மாணவர்கள்.

KUMARANS
குமரன்ஸ்
தமிழ்க் கடை
142, Hoe Street, Walthamstow, London E17 4QR
Tel: 081 - 521 4955 & 081 - 520 5960
Fax: 081 - 521 9482
Tube: Walthamstow Central
Open Seven days a week (9 a.m. - 10 p.m.)
Sri Lankan Off Licence



www.tamilarangam.net



## மோர்ட்கேஜ்...

1ம் பக்கத் தொடர்ச்சி

கம்பெனியில் வாடிக்கையாளர் பிரதிநிதியாக பல வருடமாக சேவையாற்றி வந்துள்ளார். கைது செய்ப்படும் வரையில் பல நூற்றுக்கணக்கான வீடுகளுக்கு மோர்ட்கேஜ் வசதிகளைச் செய்து கொடுத்துள்ளார். இவற்றுள் பெரும்பாலானவை இலங்கையில் இருந்து அகதிகளாக வந்த தமிழ் மக்களுக்கு செய்து கொடுக்கப்பட்டவையாகும். இந்நாட்டில் வீடு வாங்குபவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகை வருமானம் உள்ள தொழில் செய்பவராக இருக்க வேண்டும் என்ற சட்டம் இருப்பதனால், இப்படி வீடு வாங்கியோரில் பெரும்பான்மையானோர் அப்படிப்பட்ட வருமானம் உள்ள தொழிலைக் கொண்டிருக்கவில்லை. இவர்கள் குறிப்பிட்ட வருமானம் உள்ள தொழில் செய்பவர்களாகக் காட்டும் பொருட்டு திரு பாலா என்பவர் போலி நிறுவனங்களை உருவாக்கி அங்கு இவர்கள் வேலை செய்வதாகக் காட்டி, தான் வேலை செய்யும் கம்பனியிடமிருந்து மோர்ட்கேஜ் வசதிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

அண்மைக்காலங்களில் திடீரென உயர்த்தப்பட்ட மோர்ட்கேஜ் வட்டி வீதத்தின் காரணமாக மாதாந்த கட்டணத்தை இவர்களில் பலருக்கு கட்டமுடியாது போகவே இவர்கள் வீடுகளைக் கைவிட்டுள்ளனர். இவ்வாறு கைவிட்டவர்களில் எழுபத்தைந்திற்கும் மேற்பட்ட வீடுகள் இவர் மூலம் செய்து கொடுக்கப்பட்டது என்பதனால் இவர் வேலை செய்த கம்பெனி இது பற்றிய விசாரணையை மேற்கொண்டது. அச்சமயம் இவர் பல சட்டவிரோதமான செயல்களைச் செய்தமை வெளிச்சத்திற்கு வரவே பொலீசார் இவரைக் கைது செய்தனர். இது பற்றிய தகவல்களைத் திரட்டி முடியும்வரை இவர் விடுவிக்கப்படமாட்டார் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்விதமிருக்க இவரது மனைவியை அவர் வேலை செய்த கம்பெனி இடை நிறுத்தி வைத்துள்ளதாக மேற்படி வட்டாரங்கள் கூறுகின்றன.

## மாவீரர் விழாவில்...

1ம் பக்கத் தொடர்ச்சி

மை அழைத்தால் நாம் பேசத் தயாராக இருக்கிறோம் என்று கூறினார். பிரச்சனையைத் தீர்ப்பதில் ஸ்ரீ லங்கா அரசு அக்கறை காட்டவில்லை. உலக நாடுகளின் கவனத்தை திசை திருப்பவே பிரேமதாஸ பேச்சுவார்த்தை தொடர்பாக பேசி வருகிறார் என்று கூறிய பிரபாகரன் அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு உரிய தீர்வை முன்வைக்குமானால் அதனை பற்றி ஆராய நாம் தயாராக இருக்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

## விசேட புலனாய்வு..

1ம் பக்கத் தொடர்ச்சி

ருந்த சமயமே இவர்கள் படுகொலை செய்யப் பட்டது யாவரும் அறிந்ததே.

இந்தக் கொலைகளுக்கும் முன்னாள் தமிழ் நாட்டு முதலமைச்சர் கருணாநிதிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று கூறிவரும் ஜெயலலிதா குற்றவாளிகளாக எவர் காணப்பட்டாலும் அவருக்கெதிராக உரிய நடவடிக்கை எடுக்கத் தவறமாட்டேன் என்று சில தினங்களுக்கு முன்னர் நடை பெற்ற பத்திரிகையாளர்களின் மகாநாடொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளினால் இவர்கள் சுட்டுக்கொல்லப்படு முன் புலிகள் கருணாநிதியுடன் தொலைபேசியில் பேசியிருக்கிறார்கள் என்று சில செய்திகள் வெளியானது அறிந்ததே. மேற்படி விசாரணைக் குழு தனது வேலைகளை உடனடியாகத் தொடங்கியுள்ளது என்று கூறப்படுகிறது.

## 42 பேருக்கு...

8ம் பக்கத் தொடர்ச்சி

இலங்கையில் 50000 ஆண்கள் தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுவதாகவும், வெளிநாடுகளில் உள்ள தன்னினச் சேர்க்கை விரும்புவோருக்கு இலங்கை ஒரு சொர்க்க பூமியாக சித்தரிக்கப்படுகிறது என்றும் டாக்டர் ஜெயகுரு இவ்வறிக்கையில் தெரிவிக் கிறார்.


SAVE £££'s!!!
WHY PAY MORE FOR YOUR OVERSEAS TRAVELS AND VACATIONS WHILE

WINGS TRAVEL

COULD GIVE YOU THE BEST VALUE FOR YOUR MONEY!!!
ALL CHEAPEST AND COMFORTABLE AIR FARES TO:
SRI LANKA, INDIA, U.S.A., AUSTRALIA AFRICA, CANADA AND MANY MORE DESTINATIONS OF YOUR CHOICE

Call us for your travel requirements
(Tickets, Passports, Visas, Insurance, etc.)

081-520 6832
081-503 3891

120, Palmerston Road, Walthamstow, London E17

One call will Save your Money and Time



JAFFNA HOUSE

90, Tooting High Street,
London SW17
DO YOU FANCY JAFFNA FOOD IN LONDON ?
Visit us opposite Tooting Broadway Tube Station
We delight you with

SPECIALS :
FRIDAYS - VEGETARIAN THALI
SATURDAYS - KOOL
SUNDAYS - JAFFNA STYLE FRIED CHICKEN & NOODLES

Caterers for Weddings & parties. Takeaways £15 and over FREE delivery locally

TEL : 081-672 7786, 081-767 6668

Open: Sunday - Thursday 12.00 noon to 12.00 midnight
Friday - Saturday 12.00 noon to 1.00 am


## வடபகுதிக்கு...

1ம் பக்கத் தொடர்ச்சி

போல்ஸ், பென்ரோச் பற்றரி, பொலிதீன் கடதாசி போன்றவை அனுப்பப்பட்டவையே இத்தடைக்கு காரணம் என்ற போதும், பார்சல்கள் அனுப்புவது மட்டுமே தடை செய்யப்பட்டுள்ளதாகவும் ஆனால் பதிவுத் தபால்களுக்கு எவ்வித தடையும் இல்லை எனக் கூறினர்.

இப்படியான தடை பொருட்களுடன் மட்டும் நிற்கவில்லை, தற்போது கொழும்பிலிருந்து வவுனியா செல்லும் ரயில்களுக்கு பல முக்கியமான புகையிரத நிலயங்களில் ரிக்கற் எடுக்க முடியாது. அத்துடன் அவ் ரயில் செல்லுமிடம் பற்றிய அறிவிப்பும் அனுராதபுரம், மதவாச்சியுடன் நின்றுவிடும், இதனால் பயணிகள் பலத்த கஸ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. போகிற போக்கில் வடபகுதிக்கு காற்றுத்தடை, தண்ணீர் தடை வந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

## மரணத்தை...

3ம் பக்கத் தொடர்ச்சி

முத்தமிடும் இருவரில் ஒருவருக்கு இந்நோய்க்கிருமி இருக்கின்றதென்று வைத்துக் கொள்வோம், இவர்கள் இருவரினது இதழ்களிலும் ஏதேனும் சிறு காயங்கள் இருப்பின், இவர்கள் முத்தமிடும் வேளை ஒருவருடைய குருதி மற்றொருவருடைய குருதியுடன் கலக்கும். இதனால் இக்கிருமிப் பரிமாற்றம் நடைபெறும்.

### சாதாரண தொடர்புகள் மூலமும் இது ஏற்படுமா

பின்வரும் தொடர்புகள் மூலம் எய்ட்ஸ் கிருமி பரவாது. 1.) வேலை இடங்களிலோ பாடசாலைகளிலோ ஏற்படும் சாதாரண தொடர்புகள் (ஒருவரின் ஆசனத்தில் இன்னொருவர் அமர்தல், ஒடிப்பிடித்து விளையாடுதல், கைகுலுக்குதல் போன்றவை) 2.) பொது உணவு, பொது நீர் உட்கொள்ளும் உட்கொள்ளும் பாத்திரங்களை பாவித்தல். 3.) கட்டிப்பிடித்தல், தொடுதல், அணைத்தல் போன்றவை 4.) வண்டுகள், பூச்சிகள் கடித்தல் 5.) பாவித்த உடைகளைப் பாவித்தல் 6.) பொது நீச்சல் குளங்களில் குளித்தல் 7.) தொலைபேசிகளைப் பாவித்தல். 8.) மலசல கூடங்களைப் பாவித்தல்.

ஒரு எய்ட்ஸ் நோயாளி ஒருவருடன், அவருக்கு எய்ட்ஸ் இருக்கின்றதென்று தெரியாமல் உடலுறவில் பங்குகொள்ளும் மற்றவர் இந்நோயின் ஆபத்தில் இருந்து தப்பிக் கொள்வதற்கு கையாள வேண்டிய வழிமுறைகள், 1.) உடலுறவு கொள்ளும்போது ஆணுறைகளை பாவித்தல் 2.) இதழோடு இதழ் சேர்த்து முத்தமிடுதலை தவிர்த்தல் 3.) ஒன்றுக்குமேற்பட்ட நபருடன் உடலுறவு கொள்வதை விலக்குதல் போன்றவை முக்கியமானவை.

## கல்லறைப் பூக்கள்

அந்தியில் சூரியன் மறைவதில்லை-இங்கு
அஸ்தமனம் ஏதும் நிகழ்வதில்லை
வானத்தில் வருகின்ற நிலவைப் போல
வளர்கின்ற தேய்கின்ற நிலை இங்கே

வசந்தத்தில் உதிர்ந்த மலர்கள் இங்கு-இவர்கள்
வாசம் வருமுன் சாய்ந்தவர்கள்
சுதந்திரம் கேட்பதும் இங்கு
சுற்றம் காக்க நினைப்பதும் தப்பு

சுதந்திரம் கேட்ட இம் மலர்கள்
சருகாகி கல்லறை அடைந்த பின்பும்
கல்லறைப் பூக்கள் பாடுது பாட்டு
தமிழீழம் எங்கும் தாழம் போட்டு

வாடிடும் நெஞ்சங்கள் அதைக் கேட்டு
அங்கு பிறக்குது புது மூச்சு.

கே.கண்ணன், கிங்ஸ்பரி.

வாசகர்களிடம் இருந்து கதை,
கட்டுரை போன்ற ஆக்கங்களை
ஈழபூமி வரவேற்கின்றது.
ஆக்கங்களை அனுப்பவேண்டிய
முகவரி

The Eelabhoomi
164A (Rear) Mitcham Road
London SW17

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மட்டக்களப்பில்

## இரு பெண்கள் கடத்தப்படனர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு பெண்களை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தோர் கடத்திச் சென்றுள்ளனர். ஓரிரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்றஇச்சம்பவம் தொடர்பாக கிடைத்த தகவல்கள் வருமாறு.

இந்த இரு பெண்களிடம் இருந்து புலிகள், இயக்கத்திற்கு பணம் கொடுக்கும்படி கேட்டனராம். இவர்கள் இருவரும் புலிகள் தரப்பு வேண்டு கோளை நிராகரித்ததன் பேரிலேயே இவர்களை கடத்திச் சென்றுள்ளனர் புலிகள். இதன் பின்னர் இவர்களது உறவினர்களிடம் இருந்து தலா ஐந்து லட்சம் ரூபாய்களை செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

## 3000 இற்கும் மேற்பட்டோர் புலிகளின் சிறையில்

அண்மைக் காலங்களில் நடந்த யுத்தங்களில் பிடிபட்ட சிங்கள இராணுவத்தினரைப் பார்வையிட அனுமதி வழங்கிய விடுதலைப்புலிகள் அமைப்பு அவர்களை பார்வையிடுவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தது தெரிந்ததே. இந்த ஏற்பாடுகளை மேற்கொண்ட செஞ்சிலுவைச் சங்கம், தற்போதைய நிலையில் அவர்களது உறவினர்கள் யாழ்ப்பாணம் செல்வது பாதுகாப்பானது அல்ல என்று வற்புறுத்தியதன் பேரில் இந்த ஏற்பாடுகள் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது இவ்விதமிருக்க தமிழீழ மக்களிடம் இருந்து பரவலாக கிடைத்த வேண்டு கோள்களை அடுத்து செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளினால்கைது செய்யப்பட்டிருக்கும் 3000 திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களை அவர்களது உறவினர்கள் சென்று பார்வையிடுவதற்கான ஒழுங்குகளைச் செய்வதில் ஈடுபட்டுள்ளனர். வருடக்கணக்காக தொடர்ந்து கைது செய்யப்படும் மக்கள் உயிருடன் இருக்கின்றார்களா இல்லை கொலை செய்யப்பட்டு விட்டார்களா என்பது தெரியாதிருக்கும் இவர்களது உறவினர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் முயற்சியில் அபார நம்மிக்கை கொண்டுள்ளனர். ஏனைய இயக்க உறுப்பினர்கள், காட்டிக்கொடுத்தோர், மற்றும் இயக்க ஆதரவாளர்கள் என்று கைது செய்யப்பட்டிருக்கும் இவர்களைப் பற்றிய தகவல்களை சேகரித்து உறவினர்களுக்குக் கொடுக்குமாறு சில பொது நல சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

## மீண்டும் வவுனியாவரை புகையிரதச்சேவை

(எம்.எஸ்.சலீம்)

அண்மைக்கால சண்டைகளின் நிமித்தம் இடைநிறுத்தி வைக்கப்பட்ட வட பகுதிக்கான புகையிரதச் சேவையானது மீண்டும் வவுனியா வரை நீடிக்கப் பட்டுள்ளது. கொழும்பில் இருந்து புறப்படும் ராஜரட்டரஜனி என்ற புகையிரதம் சுமார் 2.05 பிற்பகலளவில் கொழும்பிலிருந்து புறப்பட்டு பிற்பகல் 9.30 அளவில் வவுனியாவை வந்தடைகின்றது. மீண்டும் இவ்வண்டி மறு நாள் அதிகாலை 3.15 அளவில் புறப்பட்டு கொழும்புக்கு செல்கிறது. முதல் நாள் சேவையின் போது 3 பேர் மட்டுமே பிரயாணம் செய்தார்கள் என்று புகையிரதத் திணைக்களம் அறிவித்தது.

## திருகோணமலையில் அகதிகளுக்கு முகாம்

(கொழும்பு மார்.4)

இந்திய அரசுடன் பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு நாடு திரும்பியிருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமான் பத்திரிகையாளர்கள் மகாநாடொன்றில் பேசுகையில் இந்தியாவின் அகதிகள் தொடர்பான யோசனையை தெரிவித்தார்.

தமிழ் நாட்டிலிருந்து ஜெயலலிதா அரசின் கெடுபிடிகளைத் தாங்கமுடியாது நாடு திரும்ப இருக்கும் அகதிகளுக்கு திருகோணமலையில் ஒரு மத்திய முகாம் ஒன்றை அமைத்துக் கொடுப்பது நல்லதென்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் கருத்துத் தெரிவித்ததாக அவர் கூறினார். நாடு திரும்பும் அகதிகள் அவரவரது சொந்த இடங்களுக்கு செல்வது இன்றைய சூழ்நிலையில் உசிதமானது அல்ல என்றும், அவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கக் கூடிய ஒரு மத்திய முகாமை அமைக்க வேண்டும் என்றும் இந்தியப்பிரதமர் எடுத்துக் கூறியதாக தொண்டமான் விளக்கிக் கூறினார்.

## 5703 நட்ட ஈட்டு விண்ணப்பங்கள்

(மட்டு நிருபர்)

மரண நஸ்ட ஈடு கோரி 5703 விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எமது மட்டுநகர் நிருபர் தெரிவிக்கின்றார். கடந் த வருடம் ஆனி மாதத்தில் ஏற்பட்ட யுத்தத்தின் பின் மாத்திரம் 2601 விண்ணப்பங்கள் நஸ்ட ஈடு கோரி அனுப்பப் பட்டுள்ளதாக ஒரு அரச தரப்பு அறிக்கை தெரிவிக்கின்றது. இந்த நட்ட ஈட்டை நிவர்த்தி செய் வற்காக 200 மில்லியன் ரூபாய்களை 'அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாக இவ்வறிக்கை மேலும் குறிப்பிடுகின்றது. 1107 விண்ணப்பங்களே இதுவரையில் பூர்த்தி செய்யப்பட்டு பணம் வழங்கப்பட்டுள்ளது இது இவ்விதமிருக்க காயமுற்றோர் நஸ்ட ஈடு கோரி சுமார் 4993 விண்ணப்பங்கள் வந்து சேர்ந்துள்ளதாக அந்த அறிக்கையில் காணக் கிடக்கின்றது.

## செய்திச் சுருக்கம்

இலங்கையில்

## 42 பேருக்கு எய்ட்ஸ்

(கொழும்பு மத்திய நிருபர் சூசைநாதன்)

உலகின் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கும் தடுப்பு மருந்து இல்லாத நோயான எயிட்ஸ் ஆனது இலங்கையிலும் வேகமாகப் பரவி வருவதற்கான புள்ளி விபரங்களை வெளியிட்டுள்ளார் டாக்டர் ஜெயகுரு.

இரண்டு இலட்சம் பேருக்கு மேல் எயிட்ஸ் முது நிலை அடையக்கூடிய வைரஸ் கிருமிகளைக்கொண்டிருக்கின்றார்கள் என்று கூறும் டாக்டர் ஜெயகுரு இதுவரையில் 42 பேர் இவ் வியாதிக்கு முற்றுமுழுதாக அடிமையாகிவிட்டதாக கூறுகிறார். இந்த 42 பேரில் 10 மரணமடைந்து விட்டார்கள் என்றும், ஏனையோர் உச்ச கட்ட நிலையிலுள்ளார்கள் என்றும் இவர் கருத்து வெளியிட்டுள்ளார். விபச்சாரிகள் மத்தியில் அதிகமாகக் காணப்படும் இந்த நோய் விரைவாகப்பரவக் கூடிய சூழ்நிலை இருப்பதாகவும் இதனைப் பரவாது தடுக்கும் பொருட்டு மக்கள் இந்நோய் தொடர்பான அறிவை புகட்ட அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இது இவ்விதமிருக்க, இந்தியாவிலிருந்து ஜெயலலிதா அரசின் கெடுபிகள் தாங்காது நாடு திரும்ப இருக்கும் அகதிகளை இறங்கு துறையில் வைத்து எயிட்ஸ் பரிசோதனை இட வேண்டும் என இந்த டாக்டர் உரிய தாபணங்களைக் கேட்டுள்ளார். தமிழ்நாட்டில் உள்ள விபச்சாரிகளில் 32 வீதமானோருக்கு எயிட்ஸ் இருப்பதாகவும் அங்கிருந்து நாடு திரும்பும் இவர்களிலும் அந்நோய்க்குரிய அறிகுறிகள் இருக்க சாத்தியக்கூறுகள் இருக்கின்றது என்றும் கூறும் இவர் இதனைக் கண்டறியும் பொருட்டே இரத்தபரிசோதனை நடைபெற அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

தொடர்ச்சி 7ம் பக்கம்

## சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் எமது இளைஞர்கள்

(எம்.எஸ்.சலீம்)

விடுதலை செய், அன்றேல் விசாரணை செய் எனக் கோரி உண்ணாவிரதமிருக்கும் வட கிழக்கைச் சேர்ந்த சுமார் 30 பேர்களின் விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறுகோரி ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் அதன் செயலாளர் நாயகம் திரு.சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி ஜனாதிபதிக்கு ஒரு தந்தி அனுப்பியுள்ளார். இரண்டு வருடங்களுக்கு மேலாக எதுவித விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர்களுக்கு போதிய உணவு, நீர் வழங்கப்படுவதில்லை. சொறி, சிரங்கு போன்ற சுகாதார பற்றாக்குறையினால் ஏற்படும் நோய்களுக்கு கூட மருத்துவவசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. பூசா -த்து வைக்கப் பட்டிருக்கும் இவர்கள் தங்களது உறவினர்களுடன் கூடத் தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. இது இவ்விதமிருக்க களுத்துறைச் சிறையில்அடைத்து வைக்கப்பட்டிருக்கும் 250 ற்கும் மேற்பட்ட தமிழ் பேசும் இளைஞர்கள் தொடர்ச்சியான உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொண்டு வருகிறார்கள்.

## பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறார் மாத்தையா

வடக்கு கிழக்கு பிரச்சனைக்கு ஒரு முடிவு கட்டும் பொருட்டு நாம் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று அழைப்பு விடுத்திருக்கிறார் புலிகள் அமைப்பின் உப தலைவரான மாத்தையா என்று அழைக்கப்படும் திரு.மகேந்திரராஜா அவர்கள். புலிகள் தரப்பின் இச் செய்தியை அடுத்து பதிலளித்த தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு தொண்டமான் புலிகளின் இந்த அழைப்பை சிறிது காலம் ஒத்திப் போட்டுள்ளதாக கூறியுள்ளார். புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்றும் யாழ்ப்பாணம் சென்று பேச தனக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை என்றும் கூறி வந்த தொண்டமான் மாத்தையாவின் அழைப்பை உட னடியாக ஏற்க மறுத்தன் காரணம் என்ன என்பதை அரசியல் அவதானிகள் கண்டறிவதில் அக்கறை கொண்டுள்ளனர். இந்தப் பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் தயாராக இல்லையா என்ற கேள்விக்குறியை ஏற்படுத்தியிருக்கும் தொண்டமானின் இந்த பின் வாங்கும் நடவடிக்கையின் உள் நோக்கம் இன்னும் தெளிவாகப்

Global Printers
164A, (Rear) Mitcham Road,
Tooting,
London SW17 9NJ.
Tel: 081-767 8895

We Undertake the following work at reasonable rates:

PRINTING - SINGLE AND MULTI COLOUR
TAMIL & ENGLISH

Letter Heads, Business Cards,
Compliment Slips, Invoices.
Wedding Cards, Invitation Cards.
Leaflets, Posters, Tickets.

Global Printers

For prompt service at reasonable rates
call us on 081-767 8895

OPEN SEVEN DAYS A WEEK
FROM 10.00a.m. to 5.00p.m.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்